# எமது ஞானகுரு பரம்பரை

# The Lineage of Our Preceptors

**Srimathy. Selvam Kalyanasunderam (B.A)**
**Barrister-at-Law-**

*Dedicated to our living Saint*
*His Holines Sri Swamy Sivananda*
*Chidananda Saraswathy Maharaj,*
*President Divine Life Society*
*Rishikesh Himalayas India*

ஓம்

# பன்நல விநாயகர் துதி

1. அந்தரத் துழன்று மாயும் அடிமையின் வினைகள் தீரச்
சுந்தரத் தோற்றம் காட்டிச் சுழன்றெழும் ஒலியும் கூட்டி
மந்திர மகிமை ஊட்டி மாநிலம் தாங்கி நிற்கும்
ஐந்தெழுத் துருவே எம்மை ஆண்டிடும் அருளே போற்றி

2. முத்தியின் இன்பம் கூட்டும் மோதகக் கையனாகிப்
பக்தியின் பயனும் காட்டும் பாவலர் காவலாகி
நித்தியம் வீடு சேர்க்கும் நேர்த்தியும் நெறியுமாகிச்
சித்திகள் சேர்க்கும் சித்திவிநாயகா போற்றி போற்றி

3. கற்பவர் கருத்திருக்கும் காண்பவர் மாணபு ணர்த்தும்
சொற்பதம் கடந்த மோன நிலையது சேர வைக்கும்
பொற்புற அமைந்த கோலப் பொருளுமிங் குரைத்து நிற்கும்
அற்புதம் காட்டி நிற்கும் அற்புத விநாயகா போற்றி

4. விதிசெயல் விளைவு காண விதிமுறை நலன்கள் கூடத்
துதிசெயல் மரபுவாழத் தூயநற் பாதம் நீட்டிப்
பதிசெயல் பாதை தேடப் பக்தியும் பணிவும் கூட
அதிசய நிலைகள் கூட்டும் அதிசய விநாயகா போற்றி

5. ஐந்தெழுத் துண்மை தேர்ந்து அனைத்துயிர் ஒன்ற தானச்
சுந்தரத் தோற்றம் கண்டு துகளறு மின்பம் பொங்கிச்
சந்ததம் தியானம் கூடும் தவநிலை யோகம் கண்டு
அந்தரம் நீங்கி அன்பு அமைவுற அருள்வாய் போற்றி

Guror Brahma, Guror Vishnu
Guru Devo Maheswaraha
Guru Sakshath Parapbrahma,
Tasmai shri Gurave Namaha;

தந்தைதாய் ஆவானும் சார்கதியிங் காவானும்
அந்தமிலா இன்பம்நமக் காவானும் - எந்தமுயிர்
தானாகு வானும் சரணுகு வானும்அருட்
கோனாகு வானும் குரு.

Guru is God in human form. He is the dear relative who takes the spiritual aspirant across Samsara. He opens up before the seeker the avenues through which the realisation of the Divine can be attained. Scriptures and the words of the Guru are the two eyes with which alone you can see your way and reach your destination without a Guru perfection cannot be attained. Therefore, one should search for a Guru. When the seeker is ready Guru appears.

**Swami Sivananda.**

# திரிலோக சஞ்சாரி ஸ்ரீ நாரத மகரிஷி குரு சரணம்

( நாரதகுரு கருணையின் வடிவம் - சதா சுற்றித் திரிந்து நாராயணநாமம் ஜெபிப்பவர் - வீணையும் கோலும் கொண்டு விண்வெளி சுற்றி விளையாடுபவர் - கலகம் விளைவித்துக் கருணை பொழிபவர் - நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்ற நிறை மொழிக்கு உரித்தானவர் - இன்றைக்கு 33 வருடங்கட்கு முன், அவரது தரிசனம் கிடைத்தது. அதன் பயனாகப் பிறந்தவை கீழ்க்காணும் பாடல்கள் )

1. நற்றவக் கோலம் பூண்டு நற்சுடரொளி பரப்பி
உற்பவத் தெழுந்து நின்று உம்பர்தம் உலகுகாட்டி
பொற்புற அமைந்தமேனி புன்மையேன் காணக்காட்டி
நற்பதமீய வந்த நாரத குருவே போற்றி

2. நாரதர் வருகை யுற்றால் நன்மைகள் பெருகுமென்ற
பாரதர் கொள்கை பாரில் நிலைத்திட வேண்டுமென்றோ
சோரராம் எண்ணத் தீயோர் சூழ்ந்தெனை வதைக்கும்போது
நேரதாம் பாதைகாட்ட நேரினில் தோன்றினாயோ

3. தவத்தின தொளியினூடு தண்மையின் பொலிவு கொண்டு
பவத்திற மழிக்கும் பக்தி மார்க்கமாம் கோலதூன்றி
அவத்தினில் அலையும் மாந்தர் அனைவரும் உய்யவேண்டித்
தவத்திருக் கோலம்கொண்டு தரணியில் திரிவதுண்டோ

4. திருவளர் தேவகானம் நாநிலம் துய்ப்பதற்காய்த்
தியாகையர் திருமுன்தோன்றிக் கையதில் ஏடு தந்தாய்
திருமிகும் தெய்வவாழ்வு அருளிடும் சிந்தையாலோ
திருமிகு பவளமேனி காட்டிநீ ஆண்டதெந்தாய்

5. உள்ளெலாம் உருகும் பக்தி வெள்ளத்தில் தோய்ந்து நின்று
உள்ளொளி பெருக்கும் ஞானத் தீயதில் உலர்ந்து நின்று
விள்ளரும் பாதம் நண்ண விழைந்திடும் ஏழை நெஞ்சில்
உள்ளூறும் உணர்வாய் ஒன்றாய் உறைந்திடும் தேவே போற்றி

6. பிரமனின் புதல்வனாகிப் பிறப்பிறப்பற்ற மேன்மைத்
தரமுயர் தத்துவத்தின் தனிப்பெருமுறைமையாகி
நரர்சுரர் யாவருக்கும் நலமுரை தூதனாகிக்
குரவரர் குருவுமாகிக் குலவிடும் கோவே போற்றி

7. உலகவர் பேச்சில் என்றும் உலவிடு கோலமாகி
நலமது சேரா மாந்தர் நாரதர் பட்டம் சூடிக்
குலமது கெடுக்கும் கோள்கள் குண்டணி குழப்பமுட்டி
நலிவுறும் மாந்தர் புன்மை அகன்றிட அருள்வாய் போற்றி

8. நினைப்பவர் நினைக்குந்தோறும் நினைவினில் நிறைந்து நிற்பாய்
தினைத்தனை அன்பு கொண்டோர் தரத்தினை உயர்த்தி வைப்பாய்
அனைத்திலும் அறிவுகூட்டி அணைத்திடும் அன்பு கொண்டோய்
தினைப்புனம் காத்தவள்ளிக்கினிய நற்குருவே போற்றி

9. கலியினில் கலங்குமெம்மைக் காத்திடும் கருணைக் கோவே
புலம் பெயர்ந்தலையும் பொய்மை வாழ்வினை உதறித் தள்ளி
நலம்பொலி வளங்கள் சேர்ந்து நன்மைகள் பலவும் கூட்டி
நிலைபெறப் பக்திகூடி நிலைத்திட அருள்வாய் போற்றி

10. வீரவாழ்வருளி வெற்றி சேர்த்திடும் விமலா போற்றி
தீரராய் வாழ்ந்து தெய்வத்திருநிலை சேர்ப்பாய் போற்றி
நாரணர் நாமம் நித்தம் நவின்றிடச் செய்வாய் போற்றி
நாரதகுருவே போற்றி நலமருள் நாதா போற்றி

11. நாரதர் நாரதீயம் நாநிலம் நவின்று போற்றும்
நாரதர் பக்திசூத்திரம் நலமுறப் பண்பு கூட்டும்
நாரதர் நாமமென்றும் நல்லன குவியச் செய்யும்
நாரத குருசீர்பாதம் நம்பிநாம் சரணடைந்தோம்.

ஓம் தத் சத்

# திருமூலர் திருவடி சரணம்

( மூவாயிரம் திருமந்திரம் தந்த திருமூலநாயனார் இராஜரிஷி நந்திதேவரின் எட்டுச் சீடர்களில் ஒருவராவர். இவர் எண்ணாயிரம் ஆண்டுகட்குமுன் இருந்தவர் என்று (தமிழ் வட்டெழுத்துக் காலம்) ஆராய்ச்சியாளர் கணித்துள்ளனர். நந்திதேவரின் எட்டுச் சீடர்கான சனகர், சனாதனர், சனந்தனர், சனத்குமாரர், சிவயோகமாமுனி, வியாக்கிரமர், பதஞ்சலி, திருமூலர் பாரத தேசத்தின் எட்டுத் திசைகளிலும் ஆத்மீக அறிவைப் பரப்பினர். திருமூலர் தென்னாட்டுக்கு ஆத்மீக ஞானம் கொடுக்க அனுப்பப்பட்டவர் )

1. நந்தியின் சீடனாகி நாநிலம் ஞானம் தேர
விந்துவின் தன்மை கூறி விளைவுறு பொருளும் கூறி
அந்தமிலின்பம் துய்க்கும் அருள்நெறி நிலையும் கூடிச்
செந்தமிழ்த் திருமந்திரம் தந்தநற் குருவே போற்றி

2. சூழன்றெழு மனமடங்கும் சூக்கும வழிகள் தேர்ந்து
கிளர்ந்தெழும் அவாவழிந்து கேடுகள் முழுதும் தீர்ந்து
வளம்பெறு நிலை வளர்க்க வழித்துணையாகி நிற்கும்
உளமுறை குருவே மூலமுழுமுதற் பொருளே போற்றி

3. விதிவழி தன்னையும் வென்றிடும் விதிகள் கூறி
ஒருவழி ஒலிவழி ஒளிவழி வெளியும் காட்டிப்
பெருவழி போந்த மாந்தர் பெருநிலை எய்தல் காட்டி
அருள்வழி அண்ணல் பாதம் அடைவிக்குமறிவே போற்றி

4. ஐந்தெழுத்தோதி உண்மை உணர்ந்திடு முணர்வுமூட்டி
ஐம்பெரும் பூதச் சேர்க்கை ஆகிய ஆக்கம் காட்டி
ஐம்புலனடங்கும் ஆற்றல் அடைந்திட அருளும் காட்டி
ஐயனெம் அண்ணல் பாதம் அண்டிட அருள்வாய் போற்றி

5. மூவாயிரம் ஆண்டு மோனத் தவமிருந்து
மூவாயிரம் பாடல் முறைமைத் திறமுரைத்து
மூவாமுறை உணர்த்தி மூன்றாம் பொருளுணர்த்தி
மூலப்பொருள் உரைத்த மூலா போற்றி போற்றி

6. மறைபொருளாம் ஐந்தெழுத்து வாய்பேசா மந்திரத்தை
முறையாக மூன்றெழுத்தில் ஒடுக்கும்முறை தேர்ந்து
நிறையான இரண்டெழுத்தில் நிற்கும் நிலை வாய்த்து
முறையாகத் தியானமுற முற்றும் அருள்வாய் போற்றி

7. எண்ணாயிரமாண்டு முன்னே எழுந்த திருமந்திரம்
கண்ணாரக் காட்டும் கருவில் மிதித்த கமலப்பாதம்
எண்ணாதிருந்துழலும் எண்ணற்ற பாவிகளை
எண்ணித் துயருற்ற இன்னுருவே போற்றி போற்றி

8. ஐந்தெழுத்தின் வழியேஆக ஆகிநிற்கும் இளங்கனியைச்
சந்ததமும் தியானம் செய்யச்சஞ்சலங்கள் மாய்ந்துவிடும்
தங்கும் இளமைவரும் தளராவலிமை வரும்
பொங்கும் இன்பம் எங்குமென்ற பேரருளே போற்றி போற்றி

9. மண்ணுலகில் மன்னுயிர்கள் இன்பமுற்றுய்தி பெறத்
தன்னையறிந்திருக்குநிலை தந்தருள வந்தவனே
மன்னுபுகழ் மறைபொருளை விரித்துரைத்த மறையவனே
எம்மிதயத்தின்னமுதே இறையவனே போற்றி போற்றி

10. சாகாவிதிசாரும் சத்துரைத்த சற்குருவே
போகாவழிபோகும் புலனழித்த பெருமையனே
ஏகாந்த மோனநிலை எய்துவிக்கும் எம்பரனே
நாதாந்த போதநிலை நாடிநிற்கும் நலமருளே

11. நந்தியருள் நம்பரனே நம்குருவே திருமூலா
புந்திபுகுந் தெம்மவரை எழுப்புவிப்பாய் இக்கணமே

விந்துநாதச் சக்கரத்தின் விதியுணர்த்தி விதிமுடித்துச்
சந்திவரை வந்தெமக்குத் தந்திடுவாய் சுத்தசுகம்

12. ஆத்மவித்தை தந்தவனே அன்புருவே அருளுருவே
போகாத பாதை போன எமைக்காக்கும் குருமணியே
ஏகாத்மபோத நிலை எம்மவரை வந்தடையும்
ஏகாந்த மோன நிலை எமக்குவர அருளுதியே

13. அட்டாங்க யோகமுறை அனைத்தும் அளித்தவனே
அட்டமகாசித்திகள் அடையும் வழி வகுத்தவனே
திட்டமாயவை சேரச் செய்யும்வழி கைகூடக்
கிட்டஇருந் தெம்மவரைக் கைகொடுத்துத் காத்தருளே

14. நிலையற்ற போகமதை நிலையென்று நம்பிநின்று
நிலையற்ற நிலைஎய்தி நிறைகெட்டு நெறிகெட்டு
நிலையான ஆத்மாவை நினையாமல் விதிகெட்டு
நிற்குமெங்கள் நிலையுயர நிர்மலனே அருள்கொட்டு

15. மூலனே போற்றி மூவா முதல்வனே போற்றி
ஞான போதனே போற்றி யோக போகனே போற்றி
தியான சீலனே போற்றி திவ்விய ரூபனே போற்றி
மோன முனிவனே போற்றி மங்கள மூர்த்தியே போற்றி போற்றி

ஓம் தத் சத்

# யுககுரு பகவான் ஸ்ரீ வேதவியாசர்

( ஸ்ரீ வேதவியாசர் மகா விஷ்ணுவின் அவதாரமாகப் போற்றப்படுவர். சனாதன தர்மத்தின் ஆணிவேராக அமைபவர். ஆங்காங்கு சிதறிக்கிடந்த வேதங்களை ஒன்றுதிரட்டி, இருக்கு, யசுர், சாம, அதர்வமென நான்காக வகுத்தவர். மகாபாரதத்தையும், பதினெண் புராணங்களையும், ஸ்ரீமத் பாகவதத்தையும் அருளி அனுக்கிரகித்தவர் - இன்றும் தோன்றும், தோன்றாத் துணையாய் இருப்பவர். இந்துக்களால் என்றும் நன்றிக்கடனுடன் துதிக்கப்பட வேண்டியவர். )

1. பங்குமுனி பராசர் பரிந்தளித்த பெருமுதலே
சங்குமுதல் சக்கரமும் விட்டுவந்த தனிவடிவே
பொங்குபுகழ் ஞானகுரு பரம்பரையின் பேரொளியே
எங்கள்குல இன்னமுதே என்றுமுந்தன் தாள்சரணே

2. வேதமொடு புராணமெல்லாம் வகுத்துரைத்த வித்தகமே
காதலொடு பேணியவை காத்தளித்த கற்பகமே
சாதலின்றி வாழ்வுவரும் சாருமினம் மேன்மையுறும்
வேதமுனி வியாசரென்று வாழ்த்திநின்ற போதினிலே

3. வித்தகத்தின் உட்பொருளை வித்தகமாய் விரித்துரைத்த
வித்தகனே வேதியனே மேதினியோர் காவலனே
சத்தியமே சாதனையே சுகரினருட் தந்தையனே
நித்தியமே நிர்மலமே நேயர்மனம் மேலிநில்லே

4. சக்திரிஷிப் பேரனாகி சக்திதரும் காவலாகிப்
பக்திநெறி பரப்பிநிற்கும் பாகவதப் பரிசுமாகி
முக்திவழி கூட்டிவைக்கும் மூதறிவு மூலமாகி
வித்தைவழி விண்டுரைத்த வியாசனடி போற்றுதுமே

5. வியாசமுனி வருகைதந்து வேதவாழ்வு மலரவைத்து
விக்கினங்கள் தீரவைத்து விழிப்புணர்வு சேரவைத்துப்

பக்குவங்கள் சேர்வதற்குப் பகவத்கீதைப் பயனுணர்த்தி
நற்கதிக்கு யுக்திகண்ட சற்குருவே போற்றி போற்றி

6. எண்ணமதில் ஏழையாகி இழிவுபட்டு நிற்குமெங்கள்
குள்ளமனக் கோணல் நீக்கிக் கொன்றொழிக்கும் பொறாமை போக்கி
தெள்ளுதமிழ் இன்பம் தேர்ந்து தேடறிய ஞானம் கூடி
மண்ணுலகம் விண்ணதாக வாழவருள் வியாசா போற்றி

7. உடம்பினுள்ளே சிறைகிடந்து உன்மத்தமுற் றலைந்து
படங்கிடந்த பாம்பின்வாய்த் தேரையெனப் பதைபதைத்துத்
தடம்புரண்ட வாழ்வதனில் தத்துவங்கள் தேயநின்று
விடம்குடிக்கும் விதியகல வித்தையருள் வியாசா போற்றி

8. மச்சகந்தம் பரிமளமாய் மாற்றிவைத்த மாமுனிவன்
மெச்சவந்த பெருநிதியே மெய்யடியார் மனவிளக்கே
நிச்சயித்தோர் நிலைக்களனே நிற்கதியாய் நிற்குமெங்கள்
அச்சமெலாம் தொலைத்தருளி ஆண்டருளும் வியாசா போற்றி

9. மன்பதையில் மானிடர்கள் மடிந்துபட்டு மாண்டிடாமல்
தொன்மைநெறி பேணிவைத்த பெருமகனே வியாசதேவா
இன்னுமெங்கள் இடர்களையும் ஏந்தலே இன்னருளே
தன்னிலையில் தவமுணர்த்தும் தண்ணருளே வியாசா போற்றி

10. வியாசரிஷி செய்ததொண்டு வேறுயாரும் செய்ததில்லை
வியாசரடி வணங்கிநிற்க விக்கினங்கள் ஏதுமில்லை
வியாசபாரதம் படிக்க வியாதிஇல்லை வெறுமை இல்லை
வியாபகமாய் வெற்றியருள் விண்ணமுதே வியாசா போற்றி

11. பங்குமுனி பரம்பரையின் புங்கமற்ற பெருமுதலே
தங்குமிடம் தந்தென்றைக்கும் தாங்கிநிற்கும் தவக்கனலே
எங்குமுந்தன் தொண்டு செய்ய எம்மை ஏவும் இன்னமுதே
கங்குல்பகல் காத்துநிற்கும் காப்பரனே வியாசா போற்றி

ஓம் தத் சத்

வியாசமுனி திருவடிகளே சரணம்

# ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதர் திருவடிகளே சரணம்

( மலையாள தேசத்தில், காலடியில் அவதரித்து, சிறு வயதிலேயே சன்னியாச தீட்சை பெற்றுப் பாரததேசம் முழுவதும் திக்விஜயம் செய்து, நான்கு திசைகளிலும் நான்கு பீடங்கள் அமைத்து, சண்மத ஸ்தாபனம் செய்து தசநாமி (சன்னியாச) பரம்பரையைத் தோற்றுவித்து பற்பல பக்திநூல்கள், பாஸ்யங்கள் எழுதி, சனாதனதர்மத்துக்குப் புத்துயிரளித்து, அத்வைதக் கொள்கையை நிலைநாட்டிய பேரருளாளர். இன்றும் ஆதிசங்கரரின் அருள்ஞான பரம்பரை நிலைத்த, நீடித்த, தொண்டாற்றி வருவது யாவரும் அறிந்ததே )

1. சங்கரனின் அவதாரமாய்க் காலடிக்கு வந்தவனே
பங்கமிலாச் சிவகுரவின் தவப்பயனே தனிமுதலே
மங்களம்சேர் ஆர்யாம்பிகை மணிவயிறு வாய்த்தவனே
எங்கள் இந்துதர்மம் காத்த இறையவனே போற்றி போற்றி

2. நான்குபீடம் நாற்றிசையில் துலங்கவழி வகுத்தவனே
பாங்குடனே பக்திநெறி பரப்பிவைக்கத் துணிந்தவனே
தசநாமி பரம்பரையைத் தந்துலகைக் காத்தவனே
தவயோக சாகரமே தண்ணருளே போற்றி போற்றி

3. தவமைந்தன் வரவுவேண்டித் தவமிருந்த சிவகுருவின்
தவத்துக்கருள் புரிந்து தானே இறங்கிவந்து
அவமே அலைந்தமக்கள் அனைவரையும் அரவணைத்து
அன்புவழிக்கிட்டுச் சென்ற ஐயனே போற்றி போற்றி

4. அத்துவிதக் கொள்கைதனை அகிலமுற்றும் அறிவதற்கு
ஆன்மீகப் பாதைகளை ஆங்காங்கே அமைத்து வைத்து
ஆன்மநேய உறவுண்டாக்க அற்புதங்கள் பலபுரிந்து
ஆனந்த வாழ்வளித்த அற்புதனே போற்றி போற்றி

5. கபாலிகர் மீமாம்சகர் கொள்கைவென்று கோதகற்றி
பொய்சேரா வாழ்வுணர்த்திப் பொய்மதங்கள் போயகல
வைதிக மதம்தழைக்க வழிமுறைகள் வகுத்துவைத்து
வையகமும் உய்யக்கொண்ட வள்ளலே போற்றி போற்றி

6. பஜகோவிந்த முதல் பற்பல பனுவல் பாடி
ஜெயசங்கரகோஷம் திக்கெட்டும் எட்டவைத்து
நிஜரூப தரிசனமும் நிர்விகல்ப சமாதிகூடி
நித்யசுகச் சோதிகண்ட நிர்மலனே போற்றி போற்றி

7. சிவானந்த லஹரிதந்து சிவஞானம் சிறக்கவைத்துச்
சௌந்தர்ய லஹரிதந்து சர்வசித்தி பெருக வைத்துச்
சிஷ்யகோடி துலங்கவைத்துச் சிவம்பெருக்கிச் சீர்பெருக்கிச்
சுத்தசிவசோதி சேர்ந்த சாகரமே போற்றி போற்றி

8. பத்மபாதர் பக்திசெய்து பரமபதம் எய்திநின்றார்
உத்தமசீடர் பலர் உலகுய்யத்துறவு பூண்டார்
ஜோதி சிருங்கேரி பீடம் துவாரகா சாரதாபீடம்
உன்னருளின் தேக்கமையா உம்பரனே போற்றி போற்றி

9. காஞ்சிகாம கோடிபீடம் காட்டுமுன்றன் கருணைவளம்
காஞ்சிப் பெரியவாளின் காருண்யமுன் லாவண்யமே
வாஞ்சையுடன் வணங்கிநிற்க வாழ்வுயரும் வளமுயருந்
தீஞ்சொல் பனுவல்கூடும் திக்கெல்லம் புகழ்நிலைக்கும்

10. சங்கரரின் நாமமென்றும் சற்குருவின் அருள்பெருக்கு
சங்கடங்கள் தீர்ந்துமேலாம் சித்தசுத்தி சேர்த்துவைக்கும்
ஐங்கரனின் அருள்பெருக்கும் ஐம்புலன்கள் அழிய வைக்கும்
பங்கமிலாப் பெருவாழ்வுப் பக்குவமும் கூட்டிநிற்கும்

11. தெய்வத்தின் குரலொலிக்கும் திக்கெட்டும் வேதகீதம்
உய்விக்கும் உலகுளோரை உயர்விக்கும் உள்ளமதை

பொய்யுடம்பு போகவைக்கும் பொற்பதமும் சேரவைக்கும்
ஐயனருள் பெருக்கி வைக்கும் ஜெய ஜெய சங்கரகோஷம்

12. இமயமுதல் குமரிவரை திக்விஜயம் செய்தவனே
இன்னாத சமயமெல்லாம் இல்லாமல் ஒழித்தவனே
இந்துமத ஒருமைப்பாட்டை எங்கெங்கும் நிலைக்கவைத்த
இன்னருளே இறையவனே எங்கள் குலக் காவலனே

13. சுப்பிரமணிய புஜங்கமென்றும் சூதுவாது தொலைய வைக்கும்
விக்கினங்கள் தீரவைக்கும் வித்தையெலாம் வளரவைக்கும்
மெத்தஅருள் சுரக்க வைக்கும் மோனநிலை கூடவைக்கும்
அத்தனருட் சாகரத்தில் அமிழ்த்தியெமைக் காத்துநிற்கும்

14. சங்கரப் பெரும்பெயரில் சங்கமிக்கும் சமயமெலாம்
பொங்கரவம் எழுந்துநின்று கருடனுடன் கூடியாடும்
வெம்பகைவர் நண்பராவர் வெற்றிதோல்வி சமானமாகும்
இங்கிதம்சேர் சங்கரப்பேர் இதயத்தை இளக்கி வைக்கும்

15. ப்ரம்சத்யம் ஜெகத்மித்யை விளக்கிநின்ற குருபரனே
ப்ரம்ம வித்தை பரப்பி நின்றப்ரம்ம ஞானப் பெருங்கடலே
ப்ரம்ம ஜோதியுட்கலந்து ப்ரம்மமே ஆகிநிற்கும்
ப்ரம்ம ஞானபோதகனே பெம்மானே போற்றி போற்றி

ஓம் தத் சத்

## மஹாமண்டலேஸ்வர் ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி குருமகராஜ் அவர்களின் பாதகமலங்கட்கு

( திவ்விய ஜீவன சங்கஸ்தாகர், மஹாமண்டலேஸ்வர், இமயஜோதி, சுவாமி ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி மகராஜ் அவர்கள் எனது குருவின் குரு (பரமகுரு) ஆவர். இமயத்தில் இருந்து கொண்டே திவ்விய ஜீவன சங்கக் கொள்கைகளை உலகெங்கணும் பரப்பியவர். ஏறக்குறைய ஆயிரத்துக்கும் அதிகமான திவ்விய ஜீவன சங்கக் கிளைகள் அகில உலகிலும் ஆத்மீகத் தொண்டாற்றி வருகின்றன. அன்னார் ஸ்ரீ சுவாமி அப்பைய தீட்சிதரின் வழித்தோன்றலாவர். எமது கண்கண்ட தெய்வமாக இன்றும் அனுக்கிரகிப்பவர். )

1. பத்தமடை செய்த புண்ணியம் பார்வதி அன்னை தந்த செல்வம்
நித்யவாழ்வு நாங்கள்காண நேயம்தானம் தவமுமோங்கப்
பித்தஉலகப் போதைநீங்கப் போகயோகப் பொலிவுமோங்க
நித்தம் ராமநாம கீதம் நிலைக்கவைத்த நேயனே

2. மன்னுமிமயம் தந்தையாய் மருவும் கங்கை அன்னையாய்
மின்னும் உலகவாழ்வை வென்று மேவுயோக போகனாய்
துன்னுமறையின் சீலனாய், தூயதொண்டர் நாதனாய்
பின்னும் முன்னுமற்ற ப்ரம்ம வித்தைகண்ட போதனே

3. ஏறுபடியிலுள்ள உயிர்கள் ஏறும்விதங்கள் கூறினாய்
வீறுகொண்ட புலன்கள் மாய வெற்றிவாகை சூடினாய்
ஊறுமின்பம் உந்தன்நாமம் எந்தன் வாழ்வின் வளமதே
மாறுமின்னல் சூழும்போது மற்றுன்கருணை மாற்றுமே

4. கடவுளே இல்லையென்று கலங்குமிக் கலியுகத்தில்
கருணையே உருவாய்வந்த குருபரா சிவானந்தா
உடலதால் உறுவதெல்லாம் ஒன்றுமாய்ப் பலவாய்க்காட்டி
திடமதாய்த் தெய்வவாழ்வு தேர்ந்திடப் பணித்தோய் போற்றி

5. மும்மலப் பிடியிற் சிக்கி முழுவதும் இழந்து நிற்கும்
எம்மையும் காக்கவேண்டி இப்புலிக் கிறங்கிவந்து
செம்மைசேர் தூயபாதம் தந்தெனை உய்யக்கொண்ட
அம்மையே சிவானந்தா என்னுடை அன்பே போற்றி

6. குரங்குபோல் கொப்புத்தாவும் மனத்தொடு வாழகில்லேன்
இரங்கிடு இப்போதையா இனித்துயர் பொறுக்கலாற்றேன்
பரந்திடும் விண்போல் உள்ள வெளியதிற் பரந்துநின்றோய்
சுரந்திடும் சுத்த அன்புச் சுனையதிற் தோய்ந்தோய் போற்றி

7. இட்டமாய் இன்பம்நண்ணி இனியநன் மாந்தரெல்லாம்
விட்டில்மேல் பூச்சியாகி மோகமாம் வலைக்குள் வீழ்ந்து
நட்டமாய் வாழ்வுதேய்ந்து நலிந்திடல் தரித்திடாது
திட்டமாய்த் தெய்வவாழ்வு தேர்ந்திடத் துணிந்தோய் போற்றி

8. என்னுடை வாழ்வும் வைப்பும் பின்வழித்தோன்றல் யாவும்
உன்னுடை உடமையாக்கி உன்பணிக்குரிமை யிட்டேன்
என்வழி இதுதான்ஐயா என்னினித் தாழ்வுமுண்டோ
அன்பினில் விளைந்த யோகபோகமே அருளே போற்றி

9. என்பொடுதசையும் மற்றும் என்னுயிர் உடமையாகவும்
அன்பெனும் மலரிட்டர்ச்சித்(து) அன்பினுக்கர்ப்பணித்தேன்
துன்பெலாம் இன்பமாக்கித் துணையெலாம் நீயேயானாய்
இன்பமே சிவானந்தா என்னுடை அன்பே போற்றி

10. பெண்களிற் பெருகநோற்றார் பார்வதி அன்னை யன்றோ
அங்கவர் மகிழ்ந்தேததிப் புரட்டாதி எட்டே அன்றோ
மங்கள மகவையீந்து மாநிலம் செழிக்கத் தந்த
புங்கவர் புகழுமாது போற்றி புனிதா போற்றி

11. மேல்நாட்டு வைத்தியத்தில் மேன்மையும் செழிப்பும் கண்டாய்
மலேசியா நாடதனில் மகத்தான தொண்டும் செய்தாய்

உளைச்சல் கொண்டலைந்த மனத்தினுறுத்தலால் உந்தப்பட்டு
அனைத்தையும் உதறிவிட்டு அன்னை நாடதனிற் புக்காய்

12. செல்வமும் சேவகமும் செகப்பிணி துடைக்கமாட்டா
அல்லலும் அவலமும் தொடரும் அனைவரும் அதனுள் வீழ்வர்
இன்னலும் இடும்பைஎன்றும் எவரையும் பிணிந்து நிற்கும்
தொல்லையைத் துடைக்க வேண்டித்துணிந்து பாரதம் நடந்தாய்

13. கன்னியா குமரிவந்து கவினுறும் இமயம் சேர்ந்தாய்
பன்னிரண்டாண்டு கங்கைக் கரையினில் தவமும் செய்தாய்
இன்னல்களகன்று மாந்தர் இன்புற வழியும் சொன்னாய்
அன்னையாய் அன்பு செய்தாய் அடியவர் வந்து சேர்ந்தார்

14. தொண்டது தொடவேண்டித் திவ்விய வாழ்வுகூடத்
தூயநற் சங்கம் கண்டு தொண்டரைத் தயார்ப்படுத்தித்
துறவறம் பூணவைத்துத் தொல்லைகள் தீரவைத்து
விண்டிறல் வேதவாழ்வு வாய்த்திடும் வழியும் கண்டாய்

15. சேவையும் அன்பும் மேலாம் தியானமும் தவமும்சேர
அவ்விய மகன்று மாந்தர் அன்பினில் நிலைத்து நிற்பர்
திவ்விய வாழ்வு கூடும் தேவைகள் பூர்த்தியாகும்
தொல்லைகள் தீரும் தெய்வத்தன்மையும் வந்துசேரும்

16. இங்கிதம் சேரும் இன்பவாழ்வதைக் காட்டிநின்றாய்
இன்னருள் கூட மக்கள் இணைந்திடும் விதியும் கண்டாய்
எங்கணும் இன்பம் சேர இறையருள் தேக்கி வைத்தாய்
மங்களம் சேர்க்கும் மந்திர மகிமையும் விளக்கிநின்றாய்

17. பாண்டவர் அன்னைகுந்தி துன்பமே வேண்டி நின்றாள்
பாரிலென் துன்பம் போகப் பிரார்த்தனை செய்வேனென்றாய்
நின்மடல் கண்டெனுள்ளம் நிறைந்தது பேரின்பத்தில்
இன்றுமென் வாழ்வில் உன்றன் வாக்கது பலிக்கக் கண்டேன்

18. பிறப்பது பிணியதாகும் பிறப்பிறப்பற்ற வாழ்வு
நிலைப்பது நெறியதாகும் நிலத்தினில் பணமோகத்தைக்
குலைப்பது குறியதாகும், கோகுல நாதகீத முரைப்பது
நிதியதாகும் நின்னருள் ஞானசோதி உதிப்பது உறுதியாகும்

19. சாந்தியைத் தேடிநிற்போர் சாவினை உதறிநிற்பர்
மாந்தருள் மாணிக்கமாய் மிளிர்ந்தநின் அன்புத்தேனை
மாந்திநாம் முயங்கிநின்றோம் மனமது மாயக்கண்டோம்
சாந்திவந்தடைந்த தெம்மைச் சார்ந்தவர் சாந்திபெற்றார்

20. சிவானந்தப் பேரமுதே சிந்தனைக்கு நலவிருந்தே
அவாபந்த வாதனைகள் அறுவிக்கும் அருமருந்தே
சிவானந்த சாகரத்தில் சேர்விக்கும் சீர்த்தியனே
சிவானந்த சற்குருவே சந்ததம் உன்சரணமையா

21. உலகத்துக் குதவவந்த உத்தமர் யாவருள்ளும்
எவர்தன்னிற் குறைந்தாய்ஐயா யாருன்னை அறியகிற்பார்
யேசுவின் அன்பு கொண்டாய் புத்தரின் கருணை கொண்டாய்
யோகியின் வலிவும் கொண்ட குருபரா போற்றி போற்றி

ஓம் தத் சத்

## மெய்ப்பொருள் வித்திட்ட சற்குரு ஸ்ரீ சுவாமி சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி (வண. மாதாஜி) அவர்களின் திருவடிகட்கு

( திருக்கோணமலை சிவானந்த தபோவன ஸ்தாபகரும், ஸ்ரீசிவானந்த சரஸ்வதி குருமகராஜ அவர்களிடம் விரஜா ஹோமம் செய்து சன்னியாச தீட்சை பெற்றவரும் என்னை அன்பினால் ஆட்கொண்டு மறுபடி பிறக்க வைத்து என் வாழ்வை வளம்படுத்திய எனது சற்குரு ஸ்ரீ சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி மாதா அவர்களின் திருவடி சென்னிமேற் கொண்டு எழுதப்பட்டவை கீழ்க்காணும் பாடல்கள் )

1. அன்னையாய் அமுதமூட்டி அன்பினால் அறிவுதீட்டி
என்னைநான் அறியும் வண்ணம் என்னுளே உணர்வுமூட்டி
பின்னையென் பிணிகளெல்லாம் பிறிதுமற்றகல ஓட்டி
மன்னுசீர் வாழ்வுதந்த மாதவக் கொழுந்தே போற்றி

2. அனாதையாய் நாதியற்று ஆதரவற்று மற்று
வினாவுவார் எவருமற்று விசனமுற் றிருந்தபோது
அனாதியாம் அமலனெந்தை அண்ணல்சீர் நாமமோதி
வினவுறு விடையாய்வந்த வித்தக மணியே போற்றி

3. தந்தையும் தாயுமாகியத் தனியரண் தானே ஆகி
சிந்தையில் தெளிவுதந்து திருநெறி வகுத்துக்காட்டி
அந்தமில் அன்புதந்து அத்துடனருளும் கூட்டி
முந்தையோர் முறையில்நிற்கும் முழுஞானக்குன்றே போற்றி

4. தாயினற்றாயுமானாய் தவத்தினற் தவமுமானாய்
பாயுநற் கங்கைய்ன்னை பண்புநற் பண்புமானாய்
ஓயுதலற்ற சேவை உணர்வினுக் குணர்வுமானாய்
மாயுதலற்ற மேன்மை வாழ்வருள் திருவே போற்றி

5. நான்விரித்த வலையதனில் நான்விழுந்து தலிக்கையினில்
வான்கருணை உருத்தாங்கி வல்லினையேன் வினையறுத்து
ஊன்உயிரின் உறவுணர்த்தி உண்மையெனக் கறிவித்த
மேன்மையுறு குருவடிவே திருவருளே போற்றி போற்றி

6. நள்ளிரவில் நடுக்காட்டில் நடைதளர்ந்து நாவறண்டு
முள்ளூறுத்த கல்லூறுத்த மூடர்பலர் பின்துரத்த
உள்ளூறுத்தும் ஆணவப்பேய் உருக்குலைக்க உந்துகையில்
விள்ளூறுமென் புகலளித்த வித்தகமே போற்றி போற்றி

7. கலியுகக் கொடுமைமாய கடுந்தவப் பெருமை சேரப்
பொலிவுறும் இமயதீரன் புனிதநற் சங்கமோங்க
நலிவுகள் பலவுமேற்று நனிபுகழ் துறவுமேற்ற
மலிகடலருளே என்றன் மனையக விளக்கே போற்றி

8. என்சுமையைத் தன்சுமையாய் ஏற்றருங்கருணை கண்டு
என்பெலாம் உள்நெகிழ எண்ணமெலாம் ஒருமையுறப்
புன்புலால் யாக்கைவென்ற பேரின்பப் பேருணர்வில்
என்புருகு சிந்தையுடன் எழிலுருவைப் போற்றுதுமே

9. ஈதலி னீதலாகி இனிமையின் இனிமையாகி
ஓதலி னுருவுமாகி உறுதவ முதலுமாகி
மோதலின் முடிவுமாகி மூதறி பொருளுமான
போதமெய்ப் புனிதநாமம் உணர்த்திய குருவே போற்றி

10. நன்மலரால் பொன்மலரால் நானேத்த விதியுண்டு
நன்மலரும் நனிநில்லா பொன்மலரும் போதவிழா
சொன்மலரால் துதிக்கின்றேன் தூய்நெறிசேர் ஞானகுரு
இன்னருளின் திறமுரைக்க என்னளவோ என்னளவோ

ஓம் தத் சத் ஓம்

# Grace of God

1. Grace of God descends in the form of Guru.

2. Even for learning the alphabet or a little arithmetic you must have Guru. what are we to say of the knowledge of Brahman then?

3. To light a candle you need a burning candle, even so an illuminated soul alone can enlighten another soul.

4. Competent disciples are never in want of competent Gurus.

5. You can find your Guru at your door; if you really want him.

6. Even if Lord Krishna remains with you, he cannot do anything for you, unless you are prepared to receive Him.

7. Books written by realised person can serve the purpose of a Guru till you come in personal cantact with a realised Yogi or adept. You can also get help from senior aspirants in the path of Yoga.

8. He who is able to clear your doubts, he who is sympathetic in your sadhana, he who does not disturb your beleifs but helps you from where you are, he in whose very presence you feel spiritually elevated - he is your Guru.

9. Once you choose your Guru, implicity follow him.

10. Listen to all but follow one. Respect all but adone one. Gather knowledge from all but adopt the teachings of one master. Then you will have rapid spiritual progress.

11. The life of the Guru is a living sermon to the sincere disciple.

12. Guru is God. A word from him is a word from God.

13. Grace of God takes the form of Guru.

14. Guru's grace works in the form of Sadana in the aspirant.

15. The Guru will only guide you. You should yourself tread the path.

16. Now a days people want a drop of water from the Kammandal of sannyasin and desire to enter into samadhi immediately. If you have got such a delusion give up immediately.

17. Obedience to Guru is better than reverance.

18. Every unpleasant incident in life is a test of your trust in Guru.

19. Even greater than a mother's love for her own child is the love of Guru for the disciple.

20. A God realised SADGURU never dies in ordinary sense. He is ever present as he has identified as he has identified himself with the Immortal, Cosmic Being Worship the Guru always.

**Sri Swamy Sivananda**

**Published by the Youth League**

**For Sanadana Dharmic Perception**

**No.3 Ridgeway Place, C olombo - 04**

**Sri Lanka. on the**

**occassion of Sri Swamy**

**Nityanandaji's visit to Sri Lanka**

**on 10-01-1998**